# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

வைகாசி - ஆனி 2016 நிலா | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 39





## LOI DU TRAVAIL

### “தொழிலாளர் நெறிமுறை மாற்றங்கள்”

# தொடரும் போராட்டங்கள்



**அரசியல்** அமைப்புக்கள், தொழிலாளர் சங்கங்கள் பிரான்ஸ் தொழிற்றுறை நிறுவனங்களின் கூட்டமைப்பு(MEDEF), மாணவர் அமைப்புக்கள் என பிரான்சின் அனைத்து மக்களையும் நீண்ட காலம் ஆக்கிரமித்து அலைக்கழித்து வந்த தொழிலாளர் நெறிமுறை மாற்றங்களுக்கு தற்காலிக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் மற்றும் தீவிர பாராளுமன்ற விவாதங்கள் சோசலிசக்கட்சியை ஒரு நெருக்கடிக்குள் தள்ளின. ஒரு கட்டத்தில் பிரான்சுவா ஹொலந்தின் ஆட்சியே கவிழ்ந்துவிடும் நிலைக்குச் சென்றது, ஆயினும் அசைந்து கொடுக்காத அதிபரும், பிரதமர் மனுவல் வால்சும் தொழிலாளர் நெறிமுறை மாற்றங்கள் அவசியமானவை என்பதில் உறுதியாய் நின்றார்கள். இது பிரான்ஸ் அரசியல் பரப்பில் வியப்பாகப் பார்க்கப்பட்டது.

இறுதி ஆயுதமாக நிக்கோலா சார்க்கோசி தலைமை வகிக்கும் Les Républicains கட்சியினரும் UDI கட்சியினரும் இணைந்து பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை (La motion de Censure) அமுல்படுத்தக் கோரினர். இந்நிலை மேலும் பரபரப்பை ஏற்படுத்தி மீண்டும் அதிகமான மக்களை தொழிலாளர் நெறிமுறைச் சட்டத்திற்கு எதிராக வீதிகளில் இறக்கியது.

நம்பிக்கையில்லா தீர்மானம் பாராளுமன்ற வாக்களிப்பில் 288 வாக்குகள் பெரும்பான்மை பெற்றிருந்தால் மனுவல் வால்சின் அரசாங்கம் உடைத்தெறியப்பட்டிருக்கும். ஆனால் வாக்களிப்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து 246 வாக்குகள் மட்டுமே பதிவாகி நம்பிக்கையில்லா தீர்மானம் தகர்த்தெறியப்பட்டது. இத் தகர்ப்பால் மீண்டும் கிளர்ந்தெழுந்த வீதிப் போராட்டங்கள் வலுவிழந்தன.

அன்றைய தினமே (12 மே 2016) பிரதமர் மனுவல் வால்ஸ் பிரான்ஸ் அரச அமைப்புச் சட்ட மூல நுணுக்கமான 49.3 முறையைக் கையாண்டு சட்டமூலத்தை அமுல்படுத்தியுள்ளார்.

**L’article 49.3** என்பது, ஐந்தாம் குடியரசின் அரச அமைப்புச் சட்ட மூலத்தின் 49வது பிரிவில் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நுணுக்கமாகும். ஒரு விவாதம் முடிவற்று நீண்டுகொண்டே போகும் பட்சத்தில் அமைச்சரவை ஆலோசனைக் குழுவினரின் அனுமதியின் பின்னர் பாராளுமன்றத்தில் பிரதமர் தனியொருவராக ஒரு சட்டமூலத்தைத் தடுக்கவும், அனுமதிக்கவும் முடியும். இங்கு எந்தவொரு வாக்களிப்பு முறைகளும் நடைமுறைப்படுத்தத் தேவையில்லை.

(2ம் பக்கம் பார்க்க..)


நிலா
www.nilafrance.com
தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94
sangeethafrance@gmail.com

இதைத் தடுப்பதற்கான ஒரேயொரு வழி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை 24 மணி நேரங்களில் அமுல்படுத்துவதே. அவ்வாறு அமுல்படுத்தப்படாவிட்டாலோ அல்லது வாக்களிப்பில் பெரும்பான்மை பெறாவிட்டாலோ பிரதமர் எடுத்த முடிவு எந்தவொரு கேள்விகளும் இல்லாமல் சட்டமூலமாக அனுமதிபெறும்.




இளந் தொழிற்றுறை அமைச்சர் Myriam El Khomri யினால் "21ஆம் நூற்றாண்டுக்கான நெறிமுறை மாற்றங்கள்" என வர்ணிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், இன்றைய திகதிக்கு விட்டுக்கொடுப்புக்கள், சமரசங்கள் என தனது ஆரம்ப நிலை வீரியத்தை இழந்துவிட்டது. சின்னாபின்னமாக்கப்பட்டு சிதைந்துள்ள நெறிமுறை மாற்றங்களில் தற்போது என்ன மீதி இருக்கிறது என அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கேள்விகளை அடுக்குகின்றனர்.

மக்கள் போராட்டங்கள் இன்னமும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. Loi du travail 17 பெப்ரவரி 2016இல் வெளியிடப்பட்டது. மார்ச் 9இல் முதலாவதாக நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் பிரான்ஸ் எங்கும் 2 முதல் 5 லட்சம் மக்கள் ஒன்று திரண்டனர். ஒரே மாதத்திலேயே நான்கு மாபெரும் போராட்டங்கள். பல மில்லியன் மக்களை ஒன்றுதிரட்டி எதிர்ப்பைப் பதிவுசெய்தது. எதிர்ப்பு மட்டுமல்லாது வன்முறைகளையும் பதிவு செய்தது. வீதிகளில் இறங்கிய இளைஞர்களில் குறிப்பிட்ட சில குழுக்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், அரசைப் பிரதிபலித்து எப்போதும் முன்னிலையில் நிற்கும் காவல்துறையின் பக்கம் திரும்பியது. கடையுடைப்புக்கள் வாகன எரிப்புகள், கண்ணீர் புகைகள், கைதுகள் காயங்கள் என பிரான்ஸ் கலவர பூமியாக மாற்றம் பெற்றது.

பிரான்சில் தற்போது அமுலில் இருக்கும் அவசர நிலைப் பிரகடனத்தால் ஏற்கனவே உடலும், மனமும் களைத்து விரக்தி நிலையிலிருந்த காவல்துறையினரும் சகிப்புத் தன்மையை இழந்து அதீத வன்முறையில் இறங்கினார்கள் என்பதும் கண்கூடு.

31 மார்ச் 2016 போராட்டத்தைத் தொடர்ந்து Place de la République சதுக்கத்திலிருந்து மக்கள் அகல மறுத்தனர். இரவு பகல் என அங்கு இன்றுவரை அரசை எதிர்த்து எதிர்ப்பு ஒன்று கூடல் தொடர்ந்து வருகின்றது. இந்த ஒன்று கூடல் Nuit debout என அழைக்கப்படுகின்றது. மக்கள் போராட்ட வடிவங்களில் புதிய வடிவமான Nuit debout பலமுறை அரசால் கலைக்கப்பட்டாலும் தொடர்ந்து அசையாமல் தொடர்ந்துவருகின்றது.

எதை எதிர்க்கின்றோம் என்று தெரியாது வெறும் எழுத்துவடிவ அரசியல் பெருமைகள் பேசும் இளைஞர்களின் கேளிக்கை நிகழ்வு எனப்பல அரசியல் ஆய்வாளர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளது.

மக்கள் போராட்டங்களைப் பின் தள்ளி 49.3 முறையைக் கையாள்வது என்பது ஒரு ஜனநாயகக் குடியரசில் அரசின் அதிகூடிய வன்முறையாகும் என்பதை எவராலும் மறுக்கமுடியாது என தொழிற் சங்கங்கள் தமது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளன.

தொழிற்றுறை மாற்றங்கள் தொழிலாளர்களுக்குப் பாதகமானதா இல்லையா என்பது வருங்காலங்களில் தான் நீங்கள் உணருவீர்கள் எனக்காட்டமாகத் தெரிவித்த பிரதமர் இதுவரை அமுலில் உள்ள தொழிற் துறைச் சட்டங்கள் வலதுசாரிய அரசுகளால் உருவாக்கப்பட்டவை. ஆனால், தற்போது ஒரு இடதுசாரிய அரசினால் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் ஒரு போதும் தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைய வாய்ப்பில்லை எனவும் தெரிவித்தார்.




சங்கீதா
அச்சகம்
39, Bd. de la Chapelle
75010 Paris
M°: La Chapelle
Gare du Nord
sangeethafrance@gmail.com
Tél. / Fax :
01.44.72.08.94

# பாலியல் தொல்லைகளுக்கு எதிராக பிரான்ஸ் பெண் அமைச்சர்கள்

**பொது வாழ்வில்** பிரான்சில் தொடரும் பாலியல் வன்முறைகளுக்கு எதிராக 17 முன்னாள் பெண் அமைச்சர்கள் குரல் கொடுத்துள்ளனர். வலது இடது என்ற அரசியல் பாகுபாடுகள் இன்றி இரு தரப்பினரும் இணைந்து குரல் கொடுத்துள்ளனர்.
ஆபாசக் கருத்துக்கள், முறையற்ற தொடுகைகள் என அனைத்துவிதமான பாலியல் அத்துமீறல்களும் பிரான்சின் பொது சமூகத்தில் களைந்தெறியப்படவேண்டும் எனக்குரலெழுப்பியுள்ளனர்.

ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த எமது சமூகத்தில் இன்று பெண்களும் அரசியல், கல்வி, மருத்துவம் என அனைத்துத் தொழிற் துறைகளிலும் முன்னிற்கின்றோம். ஆயினும் நாளாந்த வாழ்வில் ஆண்களின் பாலியல் தொல்லைகளை எதிர்த்துப் போராட நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். ஆண்களின் நடத்தைகளுக்கு ஏற்ப விட்டுக்கொடுத்துப் பணிந்து போகவேண்டியது பெண்களாகிய நாங்கள் அல்ல. மாறாக தமது நடத்தைகளை மாற்றவேண்டியது ஆண்களே எனத் தமது அறிக்கையில் ஒருமித்த குரலில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


அண்மையில் பசுமைக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய பாராளுமன்றத் துணைச் சபாநாயகருமான Denis Baupin மீது தெரிவிக்கப்பட்ட பாலியல் தொல்லைகள் தொடர்பான தொடர் சாட்சியங்களை அடுத்தே இத்தகைய அரசியல் பெண்களின் ஒருமித்த குரல் பலமாக ஒலித்துள்ளது.



1988 – 2014 கால கட்டத்தில் Denis Baupin தனது துறையில் பணிபுரிந்த பெண்கள் மீது மேற்கொண்ட பாலியல் தொல்லைகள் இன்று சாட்சியங்களாக எட்டுப் பெண்களால் பகிரப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து அவர் தனது பாராளுமன்றத் துணைச் சபாநாயகர் பதவியை ராஜினாமா செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இன்று சமூக அளவில் முன்னுதாரணமாக இருக்க வேண்டிய அரசியற் தலைவர்களே இவ்விதமாக நடந்துகொள்ளும் பட்சத்தில் மற்றைய துறை–களை, சமூக நிலைகளை எண்ண மேலும் கவலையளிப்பதாக சர்வதேச நாணய நிதிய (FMI) நிர்வாக இயக்குனர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய குற்றங்களுக்கு எதிரான சட்டங்களும் தண்டனைகளும் பெயருக்கே உள்ளன எனவும் தொழிலாளர் நெறிமுறைகளில் (Loi du travail) பல சட்ட மூலங்கள் இத்தகைய குற்றங்களுக்கு எதிராக தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாகவேயுள்ளன. இருப்பினும் அவை பெரிதும் மதிக்கப்படுவதில்லை. மிகவும் சொற்பமான பெண்களே புகார்களைக் கொடுக்கின்றனர் எனவும் அவற்றில் மிக சொற்பமானவையே தண்டனை வரை செல்கின்றன எனவும் முன்னாள் அமைச்சர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## ile-de-France




**பிரான்ஸில் வாழ்க்கைத்தரத்தில் மிகவும் ஏற்றத் தாழ்வுகள் உள்ள** சமத்துவம் அற்ற பிராந்தியம் என்றால் அது ile-de-France தான் என சமூகநலத்தொண்டு நிறுவனமான Secours Catholique தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

பிரான்சைப் பொறுத்தவரை பணச் செழிப்பில் மற்றைய 11 பிராந்தியங்களையும் பின்தள்ளி முதலாவது இடத்தில் ile-de-France இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. Ile-de-France தன்னகத்தே 8 Département கள் 1281 கொம்யூன்களில் 12 மில்லியன் மக்களையும் கொண்டுள்ளது. பிரான்சின் பணக்கார Département ஆன (92)ம் மிக ஏழ்மையான Seine Saint-Denis ம் இங்கு தான் இடம்பிடித்துள்ளன. இக்காரணியே ile-de-France ஐ வாழ்க்கைத்தரத்தில் சமத்துவம் அற்ற பிராந்தியமாக இனங்காட்டியுள்ளது. வாழ்க்கைத்தரம் என்பது வதிவிட–வசதி, சுகாதார வசதிகள் மற்றும் கல்வி வசதிகளின் அடிப்படையிலேயே ஆராயப்பட்டுள்ளது.

ஒரே பிராந்திய மக்கள் மத்தியில் அதீதமான ஏற்றத்தாழ்வுகள், சமூகப்பாகுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் அவை பிரான்ஸ் குடியரசின் மதிப்பீடுகளுக்கு பங்கம் விளைவிக்கும் என வலியுறுத்தியுள்ள தொண்டு நிறுவனம் இந்நிலைக்கு பிரான்ஸ் அரசியற் செயற்பாட்டாளர்கள் குறிப்பாக மாநகர சபைகள் சரியான முடிவு எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.






இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# 18 வயது முதல் RSA

## மேலும் 4 மாதங்களுக்கு Bourse

பிரான்சில் தொடரும் தொழிலாளர் நெறிமுறை மாற்றங்கள் தொடர் (Loi de Travail) சட்டமூல எதிர்ப்புப் போராட்டங்களில் பெரிதும் முன்னின்றவர்களாக மாணவர்களே இனங்காணப்பட்டுள்ளனர். இச் சட்டமூலம் சரியான முறையில் அமுல்படுத்தப்படவேண்டுமாயின் இவ் இளைஞர்களின் முன்னிலையில் ஒரு சில விட்டுக்கொடுப்புகளையும் புதிய மாற்றங்களையும் செய்ய அரசு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது.

இவ் விட்டுக்கொடுப்பு அடிப்படையில் சில திட்டங்கள் அரசால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லும் படியான திட்டமாக கல்விக்காக Bourse கொடுப்பனவு பெறும் மாணவர்கள் தமது கல்விக் காலம் முற்றுக்கு வந்த பின்னரும் கூடுதலாக நான்கு மாதங்கள் Bourse கொடுப்பனவு பெறமுடியும்.



இவ் உதவித் தொகை அவர்கள் ஒரு சரியான வேலை தேடும் வரை உதவியாக இருக்கும் என அனுமானிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் தொடர்ச்சியாகவே 18 வயது முதல் RSA திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சோசலிச கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக Christophe Sirugue இத்திட்டம் தொடர்பான தனது அறிக்கையை பிரதமர் மனுவல் வால்சிடம் ஏப்ரல் 19ம் திகதி சமர்ப்பித்துள்ளார்.

பிரான்சின் RSA கொடுப்பனவு தற்போது 25 வயது முதலே வழங்கப்பட்டுவருகின்றது. 2016 ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து இக் கொடுப்பனவு 2 சதவீத உயர்வு பெற்று ஒரு தனி நபருக்கு மாதம் 524,68 யூரோக்களாக மாற்றம் பெற்றுள்ளது.

இக் கொடுப்பனவானது ஒரு நபர் வேலையிலிருந்து நீக்கப்பட்டோ அல்லது விலகியோ இருக்கும் காலத்தில் மற்றுமொரு வேலையைத் தேடி எடுப்பதற்கான இடைப்பட்ட கால உதவித் தொகையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கொடுப்பனவின் ஆரம்பமான 25 வயதே தற்போது 18 வயதாக மாற்ற அறிக்கை முன்மொழிகின்றது.

தற்போதும் 18 வயது முதல் RSA பெறமுடியும் ஆனால் பெறுவதற்கான வழிமுறைகள் மிகவும் இறுக்கமானதாகும்.

- 18 வயதுக்கு முன்னரே சில வருடங்களாவது வேலை செய்தவராக இருக்கவேண்டும். அல்லது
- chomage காலம் முடிவுக்கு வந்தவராக இருக்கவேண்டும்

பிரான்சில் 2014 கணக்கெடுப்பில் 25 வயதுக்குக் குறைந்த RSA பெறுபவராக வெறும் 2000 பேரே பதிவாகியுள்ளனர்.

இக் காரணங்களால் தொடரும் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதும் அவர்களின் தொழிற்துறை எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக இருப்பதும் அரசின் கடமையாகும் எனத் தெரிவித்துள்ள அறிக்கை, இன்று பிரான்சில் ஐந்திலொரு இளைஞருக்கே வேலை தேடுவதில் வழிகாட்டுதலும் உறுதுணையும் கிடைக்கின்றன எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இத்திட்டம் அரசால் முற்றிலுமாக அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் அரச செலவீனமாக வருடத்துக்கு 4 மில்லியாட் யூரோக்கள் கணக்குக் காட்டப்பட்டுள்ளது.



## வீடுகளைச் சூடாக்கப்போகும் ஒட்டகச்சிவிங்கிகள்

விரைவில் பிரான்ஸ் வீடுகளை சூடேற்ற ஒட்டகச் சிவிங்கிகள் உதவப்போகின்றன. பிரான்சின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மிருகச் சாலையில் ஒன்றுகூடிய கால்நடை விவசாயிகள் ஒன்றிணைந்து சூழல் பாதுகாப்போடு ஒன்றித்துப்போகும் வகையில் வீடுகளைச் சூடேற்றும் திட்டமொன்றை கையெடுத்துள்ளனர்.

ஒட்டகச் சிவிங்கி மற்றும் மாடுகளின் எச்சங்களைப் பயன்படுத்தி அந்தப் பகுதியிலிருக்கும் 1700 வீடுகளை சூடேற்றவுள்ளனர். 35 விவசாயிகள் இணைந்து மேற்கொள்ளும் இந்த வர்த்தகநிறுவனத்திற்கு SAS Doué-Métha எனப் பெயரிடப்பட்டுள்ளது. எச்சங்களைப் பயன்படுத்தி 2017இல் ஆரம்பிக்கும் தொழிற்சாலையில் இருந்து பெறப்படும் மெதேன் வாயு உற்பத்தியை மேற்கொண்டு அந்தப் பகுதி Gas linesகளில் நிரப்பப்படவுள்ளது.

## புதிய உத்தியுடன் Air France

உள்நாட்டு வான் போக்குவரத்தை அதிகரிக்கும் வகையில் Air France விமானப் போக்குவரத்து நிறுவனம் புதிய சலுகையை அறிமுகம் செய்துள்ளது.

12 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவர்கள் 49 யூரோவோடு உள்நாட்டு பயணத்தை மேற்கொள்ளலாம். இதை விட முக்கிய காலங்களில் 30 வீதம் வரையான தள்ளுபடியும் வழங்கப்படும். அதன்படி உதாரணத்திற்கு ஆக 44 யூரோவோடு பாரிசிலிருந்து Marseille க்குப் பயணிக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

காரிலோ ரயிலிலோ ஒரு நாள் முழுவதும் கூட பயணிப்பதை விரும்பும் இளையோர்மத்தியில் வான் போக்குவரத்தில் ஈர்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் Air France னால் இந்தத் துருப்புச் சீட்டு இறக்கப்பட்டுள்ளது.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




# பிரெஞ்ச் மொழியில் மிக முக்கியமான சொல்!

**கேள்விகளுக்கோ** சந்தேகத்திற்கோ இடமின்றி பிரெஞ்ச் மொழியில் மிக மிக முக்கியமான வார்த்தை 'Bonjour'. சாதாரணமாக எல்லா மொழிகளிலும் இருக்கும் வணக்கம் சொல்லும் இயல்புக்கு மாறாக இந்தச் சொல்லும் அதைச் சொல்லும் முறையும் அவர்களது கலாச்சார அம்சமாக அல்லது வாழ்க்கை விதிமுறையோடு ஒட்டிய விடயமாக முக்கியம் பெறுகின்றது.

பிரான்சிற்கு வரும் வெளிநாட்டவர்கள் பிரான்ஸ் மக்களை இனிமையானவர்கள் என்றோ நட்புறவாடக்கூடியவர்கள் என்றோ எளிதில் சொல்வதில்லை. ஆனால் உண்மையில் இதற்கெல்லாம் முக்கிய முதற் காரணமாக அமைவது இந்த ஒரு வார்த்தையை வரும் வெளிநாட்டவர்கள் சொல்ல மறப்பதே என ஆய்வொன்று சுட்டிக் காட்டுகின்றது.

உலகிலேயே அதிக மக்கள் உல்லாசப் பயணிகளாக வந்து செல்லும் நாடாக பிரான்ஸ் அமைந்துள்ளது. 84 மில்லியன் மக்கள் ஒவ்வொரு வருடமும் உல்லாசப் பயணிகளாக இங்கு வருகின்றார்கள். அதிகமாக ஆங்கிலம் பேசுபவர்களே இங்கு வருவதாகவும் முக்கியமாக அவர்கள் இங்கு வரும் போது பெரும் எதிர்பார்ப்போடு வருவதாக இந்த ஆய்வுப் புத்தகம் தெரிவிக்கின்றது.

ஆனாலும் பிரான்ஸ் முற்றிலும் வேறுபட்ட கலாச்சாரத்தையும் வேறுபட்ட வாழ்க்கை விதிமுறைகளையும் கொண்ட நாடு என்பதை வருபவர்கள் மறந்துவிடுகின்றனர். பிரெஞ்ச் மொழி தெரிந்திருந்தாலும் கூட பிரான்ஸ் நாட்டவரோடு உரையாடுவதற்கு அவர்கள் பற்றிய ஒரு புரிந்துணர்வு மிக அவசியம் என அதில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அவர்களைப் பொறுத்தவரையில் எந்த இடமோ நேரமோ Bonjour சொல்ல மறப்பதில்லை. வெதுப்பகம், ஓய்விடம், lift, காத்திருக்கும் இடங்கள் என எல்லா இடமும் எல்லா நேரமும் சொல்லத் தவறுவதில்லை.

அதிகப்பிரசங்கித் தனமாக சொல்லிவிட்டோமோ? "ஓவரா" சொல்லிவிட்டோமோ என்று நீங்கள் மனதிற்குள் நினைத்தாலும் Bonjour என்ற வார்த்தையைப் பொறுத்தவரையில் எப்படிச் சொன்னாலும் அது பொருந்தும். மிகைப்படாது.

எட்டத்தில் இருக்கும் ஒருவரோடு கதைக்க அல்லது உதவிக்கு ஒருவரை அணுகும் போது 'excusez moi' (மன்னிக்கவும்) சொல்லுவதோ அல்லது பார்த்து சிரித்துவிட்டு கதைக்கத் தொடங்குவதோ போதுமானதல்ல முறையுமல்ல. அது மரியாதையாகவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அடிப்படையில் நீங்கள் பிரான்ஸ் நாட்டவரோடு கதைக்க முற்படுவதென்றாலே முழுமனதோடு Bonjour சொல்லியே ஆரம்பிக்க வேண்டும். Bonjour சொல்லுவதன் அர்த்தம் "நான் உங்களுடைய நேரத்துக்குள், இடத்துக்குள் பிரவேசிக்கின்றேன்" என்பதே. உதாரணத்திற்கு பேருந்து ஒன்றிற்குள் ஏறும்போது ஓட்டுனருக்கு Bonjour சொல்வது அவருடைய பகுதிக்குள் பிரவேசிப்பதையும் குறிக்கும்.

நீங்கள் Bonjour சொல்ல மறந்துவிட்டு பின்னர் எவ்வளவு தான் பணிவாக நடக்க முற்பட்டாலும் பதிலாக அந்தப் பணிவை அவர்களிடம் எதிர்பார்க்கமுடியாது என Barlow என்பவரால் எழுதப்பட்டுள்ள ஆய்வுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைவிடவும் பிரான்ஸ் நாட்டவர் ஒருவரோடு கதைக்கும் போது தெரிந்திருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் சில.

### ❍ தனித்துவமான தனிப்பட்ட விடயங்கள்

பிரான்ஸ் நாட்டவரோடு உரையாடும் போது முக்கியமாக எடுத்தவாக்கில் அவர்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்குள் நுழைவதைத் தவிர்க்க வேண்டும். இங்கு முக்கிய விடயம் என்னவென்றால் அவர்களைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட விடயங்கள் என்பது ஏனைய நாட்டவரிடமிருந்து தனித்துவம் பெறுகின்றது. உதாரணத்திற்கு அவர்களுடன் உரையாட ஆரம்பிக்கும் போது அவர்களுடைய பெயரைக் கேட்பதோ, என்ன செய்கிறீர்கள் என்று கேட்பதோ எல்லோருடனும் பகிர விரும்பாத தனிப்பட்ட விடயங்களாக அவர்களால் கருதப்படுகின்றது. முக்கியமாக அமெரிக்கர்களுக்கு இந்த இரண்டு கேள்விகளும் தாரக மந்திரம்.

### ❍ கொஞ்சமாய் சிரியுங்கள்

ஆங்கிலம் பேசுபவர்களைப் பொறுத்தவரையில் எல்லோரையும் பார்த்து உடனே பல் தெரிய சிரிப்பது வழக்கம். ஆனால் இங்கோ அதை ஒரு சாதாரணமற்ற விடயமாகப் பார்க்கிறார்கள். நீங்கள் அதிகமாக சிரிக்கிறீர்கள் என்றால் உங்களை முட்டாள் என்றோ அல்லது எதையோ மறைக்கிறீர்கள் என்று தான் அர்த்தப்படுத்திக்கொள்வார்கள்.

**ஆரோக்கிய வாழ்வுக்கு,**
**உங்கள் வாழ்வின் ரகசியங்கள்**
**முடிந்தவரை குறைவாகவே இருக்கட்டும்!**


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# உலகெங்கும் 29 பாரிஸ் நகரங்கள்

ஒளியின் நகரம் என வர்ணிக்கப்படும் பிரான்ஸ் தலைநகர் பாரிசுக்கு உலகெங்கும் சகோதரர்கள். வெவ்வேறு நாடுகளில் பாரிஸ் எனப் பெயர் சூட்டப்பட்ட 29 நகரங்கள் உள்ளன என்றால் ஆச்சரியம்தான். குறிப்பாக அமெரிக்காவில் மட்டும் 23 நகரங்களுக்கு பாரிஸ் என்று பெயர். இவற்றில் பிரபலமான பாரிஸ் நகரம் TEXAS மாநிலத்தில் உள்ளது. 1845 இல் பெயர் சூட்டப்பட்ட இந்த நகரம் 1984 ஆம் ஆண்டு கான் திரைப்பட விழாவில் தங்கப்பனை விருது வென்ற Paris Texas நகரத்தின் பெயரை மேலும் பிரபலமாக்கியது என்றால் மிகையாகாது.

இங்கும் சரி Tennessee மாநிலத்தில் அமைந்துள்ள இன்னுமொரு பாரிஸ் நகரத்திலும் சரி சிறிய அளவிலான ஈபிள் கோபுரங்களும் உள்ளன. அமெரிக்கா தவிர்த்து ரஸ்யா, டென்மார்க், கபோன்(Gabon) ஆகிய நாடுகளிலும் பாரிஸ் நகரங்கள் உள்ளன.

எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் பாரிஸ் நகரத்தின் பெயரே உலகெங்கும் அதிகமாக 29 நகரங்களுக்கு சூட்டப்பட்டுள்ளது. Rome நகரத்தின் பெயர் 20 நகரங்களுக்கும் ஐரோப்பாவின் இன்னுமொரு பிரபலமான ராஜ நகரமான லண்டனின் பெயர் வெறும் 9 நகரங்களுக்கே சூட்டப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "உலகின் சிறந்த Pizza தயாரிப்பாளர்"

Pizza என்றால் இத்தாலி தான். எத்தனை நாட்டு நிறுவனம் வந்தாலும் இத்தாலியின் Pizza வை அடிக்கமுடியாது. இதுவே காலங்காலமாக இருந்துவரும் கருத்து. ஆனால் தற்பொழுது "உலகின் சிறந்த Pizza தயாரிப்பாளர்" என்ற கிரீடம் பிரான்ஸ் நாட்டவரான Ludovic Bicchierai என்பவருக்கு சூட்டப்பட்டுள்ளது.

பிரான்சின் பிரபல பாரம்பரிய உணவுகளில் ஒன்றான Bouillabaisse எனும் மீன் சூப்பை அடிப்படைச் சிந்தனையாக வைத்து இவர் கடலுணவு Pizza வைத் தயாரித்திருந்தார்.

இத்தாலியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரான பார்ம் இல் இடம்பெற்ற 25வது பிட்சா உலகச் சம்பியன் போட்டியில் மரபுக்கு மாறான பிரான்சின் கடலுணவுப் பிட்சா நடுவர்களை வாய் பிழக்கச் செய்துள்ளது.



இந்தக் கிரீடத்தை இவர் தன் கைகளில் அழகு பார்ப்பதற்காக 35 நாடுகளில் இருந்து வந்த 650 பீட்சா தயாரிப்பாளர்களுடன் மோதவேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.



## பூமி வெப்பமடைதலைத் தடுப்பதில்

# பிரான்ஸ் முதலிடத்தில்...

பிரான்சில் கார்த்திகை மாதம் நடந்து முடிந்த பூமி வெப்பமடைதல் தொடர் சர்வதேச மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் மாநாடு முடிந்த கையோடு சத்தமின்றி அடங்கிவிடும் என்றே பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முடிவுகள் எழுத்து வடிவங்களில் தங்கிவிடாமல் செயல்வடிவம் பெறுவது ஆச்சரியமான ஒன்றுதான்.

பிரான்சில் எடுக்கப்பட்ட முடிவுகளை 195 நாடுகள் ஆதரித்திருந்தன. இதுவே வரலாற்றுச் சாதனையாகக் கொண்டாடப்பட்டது. தற்போது இன்னுமொரு படி மேலே சென்று 175 நாடுகள் ஐ.நா.சபைத் தலைமையகத்தில் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

உடன்படிக்கையின் முதலாவது கையொப்பம் அதிபர் பிரான்சுவா ஹொலந்தினதாகும். மாநாட்டைச் சரியான முறையில் நெறிப்படுத்தியது முதல் இன்று முன்னுதாரணமாக நின்று பிரான்ஸ் தனது கடமையை செவ்வனே முடித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு ஒப்பந்தத்தில் 175 நாடுகள் ஒன்று கூடி கையொப்பமிடுவது இதுவே முதல் தடவையாகும் எனக் குறிப்பிட்ட பிரான்சுவா ஹொலந் இன்று முதல் பாரிஸ் மாநாட்டில் எடுக்கப்பட்ட உறுதிகள் ஒரு அறிக்கை என்ற வடிவிலிருந்து சர்வதேச சட்டமூலமாக மாற்றம் பெறுகின்றன எனவும் இச் சட்டமூலம் 2017 முதல் ஒவ்வொரு நாடுகளும் பூமி வெப்பமடைதலைக் குறைக்க எவ்விதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் போன்ற அறிவுறுத்தலுடன் அமுலுக்கு வரும் எனவும் தெரிவித்துள்ளார்.











இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு


Sangeetha
imprimerie
Wedding
Cards
Latest Designs
Instant Print
39 Boulevard de la Chapelle, 75010 Paris
01 44 72 08 94



தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
First & Best
CHANGE
Meilleurs Cours – Best Rates Meilleurs Cours – Best Rates
Tél./Fax: 01.44.72.03.15
எம்மிடம் மலிவு விலையில்
தங்க நாணயங்கள்
பெற்றுக் கொள்ளலாம்!!
Sigue
MONEY TRANSFER
வங்கி அட்டை மூலம்
வெளிநாடுகளுக்கு
பணம் அனுப்பலாம்
MoneyGram
Money Transfer
Ria
WORLDWIDE MONEY TRANSFER
Bureau de Change
CHANGE + OR
CHANGE
EXCHANGE
வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 9 மணி வரை
திறந்திருக்கும்
வெளிநாட்டு பணப்பரிமாற்று சேவை
140, Rue La fayette - 75010 PARIS
(M : Gare du Nord / La Chapelle)
Rue de Dunkerque
Gare du Nord
Rue du Faubourg-Saint-Denis
Métro La Chapelle
La Poste
Rue La Fayette
First & Best CHANGE

பாரிஸ் லாச்சப்பலில்

# கோபால் அன் கோ

# GOPAL & CO

வாடிக்கையாளர் வசதி கருதி ....

**லாச்சப்பலில்...**
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle

**பொபினியில்...**
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme

இலங்கை இந்தியாவிற்கு
மிகக் குறைந்த விலையில்
கதைப்பதற்கு Kish Mobile!




Tél : 09 51 56 76 52 Fax : 01 46 07 13 03

# McDonald's 300 மில்லியன் யூரோக்களை பிரான்சுக்கு வரிகளாக செலுத்தவேண்டும் !!!



பிரான்ஸ் McDonald's க்கு கடந்த மாதம் ஒரு துன்பம் நிறைந்த மாதமாக அமைந்திருக்கின்றது. அவர்கள் மீதான இரு குற்றச்சாட்டுக்களிலிருந்து மீண்டுவர பெரிதும் போராடி வருகின்றனர்.

– பிரான்சுக்கு பல மில்லியன் யூரோ வரிகள் செலுத்தவில்லை.
– தொழிலாளர்களுக்கு ஏற்றுக்கொள்ளவே முடியாத அளவில் குறைந்த சம்பளம் வழங்குகின்றது.
இவை இரண்டே அவர்கள் மீது எழுந்துள்ள மிகப்பெரிய குற்றச்சாட்டுக்கள்.

அமெரிக்காவின் மாபெரும் துரித உணவு நிறுவனமான McDonald's பிரான்சுக்கு 300 மில்லியன் யூரோக்களை வரிகளாக செலுத்தவேண்டியிருப்பதாக பிரான்சின் நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது. லக்சம்பேர்க் மற்றும் சுவிஸில் உள்ள வரித் தவிர்ப்புத் திட்டங்களின் ஊடாக இங்கு கிடைக்கும் லாபம் உறிஞ்சப்பட்டுள்ளதாக ஏப்ரல் 19 வெளியிட்ட அறிக்கை தெரிவித்துள்ளது.

தொடர்ந்து கொண்டிருக்கும் 2013 இல் ஆரம்பித்துள்ள வரி ஊழல் விசாரணைகளின் ஒரு பகுதியாக 2015இன் இறுதிப்பகுதியில் McDonald's க்கு பற்றுச்சீட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 300 மில்லியன் யூரோ ரசீது அனுப்பி வைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த பிரான்ஸ் McDonald's மறுத்துள்ளது. இந்தத் தொகையில் 100 மில்லியன் யூரோக்கள் தண்டப்பணமும் அடங்குவதாக மாதாந்த வர்த்தக சஞ்சிகை L'Expansion தெரிவித்துள்ளது.

இவையெதற்கும் பதிலளிக்காத McDonald's பிரச்சினையை மழுப்பும் வகையில் "பிரான்சில் நிறுவன வரி செலுத்தும் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாக இருப்பதில் McDonald's பெருமைப்படுகின்றது. 2009இலிருந்து 1.2 பில்லியன் யூரோக்களை செலுத்தியுள்ளது. அதைவிட கடந்த ஏழு வருடங்களாக 15000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது" என FRANCE 24 என்ற பிரபல ஊடகத்திற்கு எழுத்துமூல குறுஞ்செய்தியூடாகத் தெரிவித்துள்ளனர்.

## மனித மூளையில் நாளாந்தம் 10000 நரம்புக்கலங்கள் மரணிக்கின்றன..



வளர்ந்த மனிதன் ஒருவரின் மூளையில் நாளாந்தம் 10 000 வரையான நரம்புக் – கலங்கள் இறக்கின்றன. இவை தலையில் ஏற்படும் சிறு தாக்கங்களால் அல்லது அதிர்ச்சியால் நாளாந்தம் அழிகின்றன. அதேவேளை அவை நாளாந்தம் புதுப்பிக்கவும்படுகின்றன. உதைப்பந்தாட்டம் போன்ற கடுமையான விளையாட்டுக்களில் ஈடுபடும்போதும் மூளையில் நரம்புக் கலங்கள் இறக்கின்றன.

மனிதனின் 65 வயதுவரை இழக்கும் நரம்புக்கலங்கள் மீளவும் புத்துயிர்க்கப்படுகின்றன. எனினும் இந்த வயதெல்லை எல்லோருக்கும் பொதுவானதாக இல்லை. நரம்பூக்கங்கள் இழப்பீட்டில் சமனாக இல்லை. சிலருக்கு 30 வயதில் இருந்தே நரம்புக்கலங்கள் இழப்பு ஆரம்பமாகிவிடுகின்றது.

சத்தமாக இசை கேட்பது, சமூகத்துடன் தொடர்பு குறைந்த வாழ்க்கை முறை, மனதளவிலான அழுத்தம் இருத்தல், மூளைக்கு வேலை கொடுக்காமல் சோம்பல் தனத்துடன் வாழும் முறை போன்றவை மனித மூளையில் உள்ள நரம்புக் கலங்கள் அழிய வழிவகுக்கின்றன.



## தற்போது மகுடம் இத்தாலிக்கு

உலகின் தலைசிறந்த vin உற்பத்தியாளர் என்ற மகுடத்தை பிரான்ஸ் கடந்த வருடம் இழந்துள்ளதாக சர்வதேச வைன் அமைப்புத் தெரிவித்துள்ளது, மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் உலகளாவிய ரீதியில் விரிந்துகிடக்கும் சந்தைப் போட்டியுமே இதற்கான காரணமாக எண்ணப்படுகின்றது.



கடந்த சில வருடங்களாக வைன் தொழில் துறையைப் பொறுத்தவரையில் பிரான்ஸ் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையூடாகப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. உலகின் மிகத் தரமான வைன் உற்பத்தியாளர் என்ற புகழைத் தக்கவைத்திருந்தாலும் கூட வைன் ஏற்றுமதியில் கடந்த எட்டு வருடங்களாக இத்தாலி, ஸ்பெயினிடம் தோல்வியடையும் நிலையே உள்ளது.

வைன் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் 2011 இல் இத்தாலி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

2014 இல் மீண்டும் தன்னிடத்தைக் பிரான்ஸ் கைப்பற்றியிருந்து பிரான்ஸ்.

பிரான்சின் ஒட்டுமொத்த உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியானது மக்களின் உள்நாட்டு மது அருந்தும் பழக்கம் மாறியுள்ளமையையே பிரதிபலிக்கின்றது. பிரான்சில் 1960களில் சராசரியாக ஒருவருக்கு 100 லீற்றர்கள் என்ற அடிப்படையில் வைன் உற்பத்தி செய்யப்பட்டது. இது 2015இல் 42 லீற்றராக சரிவடைந்துள்ளது.




# ‘பனாமா பேப்பர்ஸ்’

## சிக்கிக்கொண்ட கோடீஸ்வரர்கள் !

**தற்போது** உலகெங்கும் பெரிதும் பேசப்படும் பனாமா பேப்பர்ஸ் விவகாரம் உலகெங்குமுள்ள பல ஆட்சியாளர்கள், அரசியல் தலைவர்கள், உயரதிகாரிகள் மற்றும் பெருஞ்செல்வந்தர்களின் வரி ஏய்ப்பு மற்றும் கருப்புப்பணம் பதுக்கம் தொடர்பான மிக இரகசிய ஆவணங்கள் பொதுவெளியில் கசிந்துள்ளன.

இத்தகைய இரகசியக்கசிவு 2010ம் ஆண்டு உலகையே புரட்டிப்போட்ட Wikileaks தகவல் கசிவுகளுக்கு அடுத்து பெரிதும் பேசப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. Wikileaks மூலம் வெளியானது வெறும் சொற்பமான (1, டெரா பைட்) ஆவணங்களே, ஆனால் தற்போது பனாமா பேப்பர்ஸ் மூலம் (2, 3 To டொராபைட்) 11, 5 மில்லியன் (ஒரு கோடியே 15 லட்சம்) ஆவணங்கள் வெளியாகி உலகையே அதிரவைத்துள்ளது.

பனாமா அமெரிக்காவின் தென்முனையில் அமைந்துள்ள ஒரு குடியரசாகும். இங்கு சுவிஸ் போன்று யார் வேண்டுமானாலும் பெரும் பண முதலீடுகளைச் செய்ய முடியும். நேரடி வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்க முடியாது எனினும் 1000 யூரோ முதலீடு போட்டு பெயருக்கு ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து அந்நிறுவன வங்கிக் கணக்கில் எத்தனை பில்லியன் வேண்டுமானாலும் போட்டு வைக்க முடியும். இத்தகைய கருப்புப் பண முதலீடுகளின் இரகசியம் இறுக்கமாகப் பேணப்படும் என்பது பனாமாவின் விசேஷம் என்றால் இவற்றையெல்லாம் போட்டுடைத்துவிட்டது பனாமா பேப்பர்ஸ்.

இத்தகைய பணப் பதுக்கல் ஆவணங்களை சட்டமுறைப்படி பேணுவதற்கு பனாமாவில் வீதிக்கு வீதி சட்ட நிறுவனங்கள் பரந்து கிடக்கின்றன. அவற்றில் ஒன்றான மொசாக் பொன்சேகா (Mossak Fonceca) சட்ட நிறுவனத்தின் பெயர் குறிப்பிட விரும்பாத நபரினா–லேயே இத்தனை கோடி ஆவணங்களும் வெளியே கசிந்துள்ளன. அவர் தனது செயற்பாட்டிற்கு இக் குற்றங்களை மக்களுக்கு அம்பலப்படுத்துவதை எனது கடமையாக உணருகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

1977 முதல் 2015 வரை பேணப்பட்டுவந்த இத்தனை கோடி ஆவணங்களும் ஜேர்மனிய நாளிதளான Süd-deutsche Zeitung க்கு இன்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தங்களால் இவ்வளவு ஆவணங்களையும் புலனாய்வு செய்ய முடியாது என உணர்ந்த நாளிதழாளர்கள் அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச புலனாய்வு இதழியலாளர்கள் அமைப்பிடம் உதவிகோரித் தகவல்களை அம்பலப் படுத்தினார்கள்.

ஜெரமனிய நாளிதழ் தெரிவுசெய்யப்பட்டது ஒன்றும் தற்செயலானது அல்ல. Mossack Fonceca சட்ட நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்களில் ஒருவரான Jürgen Mossack ஜெர்மனியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

இந்தியா உட்பட 79 நாட்டு செய்தியாளர்கள் இணைந்து எட்டு மாத ஆய்வின் பின்னர் தகவல்களைக் கட்டுரைகளாக வெளியிட்டுள்ளனர். ரஸ்ய அதிபர் புட்டின், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் சேரிப், சவுதி மன்னர், ஆர்ஜன்ரீனா மற்றும் உக்ரைன் அதிபர்கள் ஐஸ்லாந்துப் பிரதமர், இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமருனின் தந்தை, அமிதாப் பச்சன், ஐஸ்வர்யா ராய், ஜக்கிசான், லியோனல் மெசி, பிரான்ஸ் முன்னாள் வரவு செலவு திட்ட அமைச்சர் Jérôme Cahuzac, மரின் லூப்பன், மிசேல் பிளட்டினி, SFR இயக்குனர்கள் என உலகெங்கும் உள்ள 12 நாட்டுத் தலைவர்கள், 128 முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இன்னும் உலகின் முதல் 500 பணக்காரர்களில் 29 பேர் இந்த நீளமான பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

பனாமா பேப்பர்ஸ் கசிவுகள் இதுவரை தேச பக்தர்களாக தம்மை முன்னிலைப்படுத்தியவர்கள் பலரின் முகத்திரையை நீக்கியுள்ளது. ஒவ்வொரு நாடுகளும் கருப்புப் பணப் பதுக்கல், வரி ஏய்ப்பு குற்றவாளிகளை முடக்க தத்தமது நீதித் துறைகளை முடுக்கிவிட்டுள்ளன. தம்மை ஆளும் தலைவர்களின் முகங்கள் அம்பலமாக மக்களும் போராட்டங்களில் இறங்கிவருகின்றனர்.



இத்தகைய மக்கள் போராட்டத்தின் பிரதிபலனாக ஐஸ்லாந்து அதிபர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார் என்பது இக் கசிவின் முதல் தாக்கமாகும். ஆனால் தொடர்ந்து உலகெங்கும் பனாமா பேப்பர்சின் அதிர்வுகள் நீண்ட நாட்கள் எதிரொலிக்கும் என்பதில் எந்தச் சந்தேகங்களும் இல்லை.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

**ZÉRO déchet**

# பசளையாகும் பாரிஸ் கழிவுகள்

பாரிஸ் நகரில் மாநகர சபையின் கீழ் 71 திறந்த வெளிச் சந்தைகள் இயங்கிவருகின்றன. வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறைகள் கூடிக் கலையும் இந்தச் சந்தைகள் பாரிஸ் நகரின் அழகியலோடு கலந்துவிட்டன என்றால் மிகையாகாது. பாரிசுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் கூட பாரிசின் முக்கிய சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடுவதோடு மட்டும் நின்றுவிடாமல் இத்தகைய திறந்தவெளிச் சந்தைகளுள் ஒரு சுற்றுச் சுற்றிவருவதும் வாடிக்கையாகிவிட்டது.

பாரிஸ் மக்களும் பெருவிநியோக அங்காடிகளை விட சந்தைகளில் தரமான, விலை மலிவான பிரான்ஸ் விளைபொருட்களையும் தயாரிப்புப் பொருட்களையும் தேவைக்கு அளவான வகையில் பெற்றுக்கொள்ள முடியும் என்ற வகையில் எப்போதும் சந்தைப் பிரியர்களே.

குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைச் சந்தைகள் அங்கு கூடுவது நண்பர்களைச் சந்திக்க, சிறந்த வையினை, சீஸ் வகை– களை, பதப்படுத்தப்பட்ட மாமிச உணவு வகைகளை சுவைக்கவென இச் சந்தை ஒன்றுகூடல்கள் பிரான்ஸ் மக்களின் பாரம்பரியத்தோடு ஒன்றிவிட்டது.

சந்தைகள் கூடிக் கலையும் ஒவ்வொரு நாளும் பல நூறு தொன் குப்பைகளை விட்டுச் செல்கின்றன. இக் குப்பைகள் மாநகர சபையினரால் சேகரிக்கப்பட்டு தீயிட்டுக் கொழுத்தும் வழமையான செயற்பாடு சுற்றுச் சூழல் ஆர்வலர்களால் தொடர்ந்து வன்மையாகக் கண்டிக்கப்பட்டுவந்தது.

இவற்றைக் கவனத்தில் எடுத்த மாநகர சபையினர் Zero déchet திட்டத்தை அறிவித்துள்ளனர். சந்தைகளிலிருந்து வெளியேறும் குப்பைகளில் எஞ்சிய தாவர உணவுப்பொருட்கள், பழங்கள், பூக்கள் போன்றவை தேர்ந்தெடுக்கப்பட்டு அவை மீண்டும் பயன்படும் வகையில் விளைநில உரமாக இயற்கை எரிவாயுவாக மாற்றம் பெறவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் வருடத்துக்கு இரண்டாயிரம் தொன் மீள் உபயோக எச்சங்கள் சேகரிக்கப்படும். இத்தகவலை பாரிஸ் மாநகர அதிபர் Anne Hidalgo தெரிவித்துள்ளார்.

## நிர்வாகம்

**நிர்வாகம் என்பது நம்முடைய அதிகாரத்தை மற்றவர்மேல் திணிப்பது அல்ல. சிறந்த நிர்வாகம் என்பது மற்றவர்களுடைய முழுத்திறமையும் வெளிப்படத் தூண்டுகோலாயிருப்பது**

# இப்படியும் மனிதர்கள்!

விசித்திரமான வெதுப்பக உரிமையாளரதும் பிச்சைக்காரனதும் உறவு இறுதியில் மனக்கசப்பாக மாறியுள்ள சம்பவம் பிரான்ஸின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள Dole எனும் நகரத்தில் இடம்பெற்றுள்ளது.




Michel Flamant என்பவரே அந்த வெதுப்பகத்தின் உரிமையாளர். இவரது வெதுப்பகத்தின் முன்னால் தினமும் பிச்சை யெடுக்கும் Jérome Aucant ஒரு நாள் இந்த உரிமையாளர் காபன் மொனோக்சைட் நச்சேற்றத்தால் திணறுவதைக் கண்டு தக்க தருணத்தில் உதவியதால் அவரது உயிர் காப்பாற்றப்பட்டது.

இந்த உதவிக்குக் கைமாறாக தனது வெதுப்பகத்தை 1 யூரோவிற்கு அந்த பிச்சைக்காரருக்கு வழங்கி அவரது வாழ்வில் ஒளியேற்றத் திட்டமிட்டார். இந்த செய்தி உலகெங்கும் வாழும் மக்களின் மனதை உருக்கும் செய்தியானது. ஆனாலும் நிலைமை ஒருசில தினங்களுக்குள் மாறிவிட்டது. அந்தப் பிச்சைக்காரரோ குடியை நிறுத்தவில்லை. அத்துடன் தொலைபேசியூடாக நேர்காணல் மேற்கொண்ட பெண்ணோடு தகாத முறையில் நடந்தது மட்டுமின்றி அறிவுரை கூறிய உரிமை யாளரை தாக்கவும் முற்பட்டுள்ளார்.

சினமடைந்த உரிமையாளர் வெதுப்பகத்தை விட்டு வெளியேறுமாறு விரட்டியடித்ததுடன் கைமாற்றும் திட்டமும் கைவிடப்பட்டது.

## "Un café": €1,50 "Un café s.v.p.": €1,30

பிரான்சுக்கு வரும் உல்லாசப் பயணிகளும் வெளிநாட்டவர்களும் உணவகங்கள் café களில் பணியாற்றும் பரிமாறுனர்கள் மரியாதையின்றி நடந்துகொள்வதாக பல புகார்கள் கொடுத்திருக் கிறார்கள். ஆனால் புகைப்பட ஆதாரங்களின்படி வாடிக்கை யாளர்களே தங்களுடைய பாணியை மாற்றவேண்டியிருப்பது தெளிவாகி யுள்ளது.



இவ்வாறு ஒரு வணக்கம் கூட சொல்ல நினைக்காத வாடிக்கையாளர்களால் சலிப்படைந்துள்ள பிரான்ஸ் உணவகங்கள் மற்றும் café களின் சில உரிமையாளர்கள் புதிய உத்தியை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

மரியாதையாக உத்தரவிடுவதற்கு அமைய விலையில் மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளனர். அதற்கேற்ப சில உணவகங்களில் "A coffee": €1,50 "A coffee, please": €1,30 "Hello, a coffee please": €1 என மரியாதையாக உத்தரவிடும் போது நல்ல சேவையும் குறைந்த விலையும் கிடைக்கும்வகையில் உணவக விலை அட்டைகளை மாற்றியமைத்துள்ளனர்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# MAHAJANA Master Institute
# மகாஜனா கல்வி நிலையம்

**“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற”**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க,
பெப்ரவரி மாதம் நடைபெற்ற கேம்பிறிஜ்
பல்கலைக்கழகத்தின் அனைத்துலக
ஆங்கிலப்பரீட்சையில் (B1) திறமைச்சித்திஎய்தி
எம்மையும், பெற்றோரையும் பெருமைப்படுத்திய

**எங்கள் மாணவர்களுக்கு**
**எங்கள் வாழ்த்துக்கள்!**

| Name | |
|---|---|
| MOHANRAAJ HARINI | DRANCY |
| KAJENDRA DADLIYA | CRETEIL |
| THEVAPALARATNAM THANUS | DRANCY |
| THARMAPALAN PIRAWIN | CRETEIL |
| KARUNAKARAN CHARANGA | CERGY |
| KANDIAH DUSHARA | AUBERVILLIERS |
| UTHAYAKUMAR NERUSAN | LA COURNEUVE |
| SATHEESWARAN REGAN | CERGY |
| NAGESWARAN MATHUJA | CRETEIL |
| KRISHNAN PIRAKAVI | CRETEIL |
| KIRUPAKARAN KIRUTTHIKA | VIGNEUX SUR SEINE |
| JUDES MARY JENNIFER | EPINAY SUR SEINE |
| THAYALANATHAN MYURY | CRETEIL |
| THAYALANATHAN MYURY | CRETEIL |
| KAJENDRA MINUYA | CRETEIL |
| PRABAHARAN PIRATHIBA | CRETEIL |
| MAHESWARAN ADCHARA | CERGY |
| KARUNAKARAN CHARANGA | LA COURNEUVE |
| KUMANAN VISHWA MAYOORAN | CERGY |
| VALLIPURAM THARSIKAN | |
| NAGARAJAH ROBINSA | CRETEIL |
| ESWARANATHAN SUJEESHAN | CRETEIL |
| THAMBITHURAI MARCIA | VIGNEUX SUR SEINE |
| THAMBITHURAI EVELYA | VIGNEUX SUR SEINE |
| THAYALANATHAN MYURY | VILLEJUIF |
| VIJAYAKUMAR NITHARSHINI | CRETEIL |

**2007 இலிருந்து இதுகாலவரை.....**

ஆங்கில மொழிக் கல்வியில் மிகவும்
பெறுமானமுள்ள வெற்றிகளைப் பெற்ற நாம்
**தற்போது எமது கல்விநிலையத்தை**
**கணிதம் – பிரெஞ்சு – ஆங்கிலம்**
**என விரிவுபடுத்தியுள்ளோம்**

7, Rue Emile Zola,93120 La Courneuve.
Renseignements et Inscriptions au 06 11 68 82 50.

RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்
Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
**வேலுப்பிள்ளை வியாகரத்தினம்**
(அல்லைப்பிட்டி, பிரான்ஸ்)
தோற்றம் : 07. 09. 1924
மறைவு : 24 . 03. 2016



அமரர்
**சாரிகா செல்வநாயகம்**
(யாழ். கரம்பன், பிரான்ஸ்)
தோற்றம் : 30. 07.1969
மறைவு : 22. 04. 2016



அமரர்
**குருசு போல்**
(யாழ். நாரந்தனை, பிரான்ஸ்)
தோற்றம் : 15. 06. 1956
மறைவு : 27. 03. 2016



அமரர்
**பிரபாகரன் நிசங்காதேவி**
(யாழ். அராலி தெற்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 03. 09. 1967
மறைவு : 23. 04. 2016



அமரர்
**கந்தசாமி கோபாலகிருஷ்ணன்**
(முல்லைத்தீவு, நோர்வே)
தோற்றம் : 12. 09. 1974
மறைவு : 31. 03. 2016



அமரர்
**சிந்தாமணி சொக்கநாதன்**
(யாழ். மல்லாகம், பிரான்ஸ்)
தோற்றம் : 18. 01. 1936
மறைவு : 25. 04. 2016



அமரர்
**கந்தசாமி கிருஸ்ணகுமார்**
(புங்குடுதீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 18. 09. 1969
மறைவு : 31. 03. 2016



அமரர்
**பாலசிங்கம் அன்னமுத்து**
(நெடுந்தீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 21. 12. 1932
மறைவு : 11. 04. 2016



அமரர்
**ஐயாத்துரை பவளம்**
(கொக்குவில் மேற்கு, ஜேர்மனி)
தோற்றம் : 18. 12. 1928
மறைவு : 10. 04. 2016



அமரர்
**மார்க்கண்டு கிருபானந்தன்**
(காரைநகர், ஜேர்மனி)
தோற்றம் : 30. 09. 1965
மறைவு : 18. 04. 2016



அமரர்
**வைத்திலிங்கம் செல்வராசா**
(யாழ். திருநெல்வேலி, பிரான்ஸ்)
தோற்றம் : 24. 03. 1963
மறைவு : 12. 04. 2016



அமரர்
**சத்தியானந்தன் உஷாந்தினி**
(கிளிநொச்சி ஜெயந்தி நகர்)
தோற்றம் : 19. 09. 1972
மறைவு : 05. 05. 2016



அமரர்
**ரஞ்சிதமலர் ஈஸ்வரதாஸ்**
(கோட்டைக்காடு மல்லாகம்)
மறைவு : 12. 04. 2016



அமரர்
**நாகராசா நாகேஸ்வரி**
(யாழ். சங்கானை, பிரான்ஸ்)
தோற்றம் : 07. 06. 1944
மறைவு : 18. 02. 2015



அமரர்
**ம. மதிசூதன்**
(யாழ். அராலி கிழக்கு)
தோற்றம் : 16. 04. 1983
மறைவு : 16. 04. 2016



அமரர்
**இராஜசேகரம் கிரிதரன்**
(செல்வாநகர் கிளிநொச்சி)
தோற்றம் : 07. 08. 2009
மறைவு : 10. 05. 2016



அமரர்
**தம்பிராசா தங்கம்மா**
(வேலணை சரவணை கிழக்கு)
தோற்றம் : 28. 10. 1936
மறைவு : 20. 04. 2016



அமரர்
**ஜோசப் அன்ரனிப்பிள்ளை**
(யாழ். குருநகர், பிரான்ஸ்)
தோற்றம் : 30. 11. 1944
மறைவு : 10. 05. 2016



பாரிசில்

# "007: ஜேம்ஸ் பொண்ட்"

மாபெரும் ஜேம்ஸ் பொன்ட் கண்காட்சி பாரிசில் அரங்கேறுகின்றது. உலகின் மிகப் பிரபல உளவாளி பாரிசுக்கு வருவதால் ஜேம்ஸ் பொன்ட் ரசிகர்கள் மிகவும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் உள்ளனர்.

1953ஆம் ஆண்டு இயான் பிளெமிங் எனும் பிரித்தானிய எழுத்தாளரால் எழுதப்பட்ட புனைவின் நாயகனாக இவர் மக்கள் மனதில் இடம் பிடித்தார். இயான் பிளமிங் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது கடற் புலனாய்வுத் துறையில் பணியாற்றிய காலப்பகுதியில் தான் சந்தித்த அனேகமான இரகசிய




புலனாய்வாளர்கள் மற்றும் தளபதிகளின் ஒட்டுமொத்த கலவையாக ஜேம்ஸ் பொன்ட்டை உருவகப்படுத்தியிருந்ததாக குறிப்பிடுகின்றார். பிரித்தானிய இரகசிய உளவு அமைப்பான MI6 இன் உளவாளியாக தோற்றம்பெற்ற ஜேம்ஸ் பொன்ட் அந்தத் துறைசார் பணிகளில் இருக்கும் பலருக்கும் இப்போதும் ஒரு முன்மாதிரி என்றே கூறலாம்.

Grande Halle de la Villette எனும் இடத்தில் ஏப்ரல் 16 தொடக்கம் செப்ரெம்பர் 4 வரை ஜேம்ஸ் பொன்ட்டின் உபகரணங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

இவரின் சரித்திரத்தைக் காண்பிக்கும் அவர் பயன்படுத்திய உடை, துப்பாக்கி, கைப்பை என 500 இற்கும் மேற்பட்ட பொருட்கள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.






# பிரான்சின் சிறந்த Lycée

விருது வென்ற

## Blanc Mesnil Lycée-Mozart

பிரான்சின் சிறந்த அரச பாடசாலைகளுக்கான Lycée தரப்படுத்தலில் Blanc Mesnil'ல் அமைந்துள்ள Lycée - Mozart முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. பெரும்பாலும் 93 (Seine Saint-Denis) கல்விக் கூடங்கள் குறிப்பாக அரச கல்விக் கூடங்கள் ஏனைய பகுதி மக்களால் சிறிது இழக்காரமாகவே பார்க்கப்படுவதுண்டு. ஆனாலும் தொடர்ச்சியான Bac பரீட்சை பெறுபேறுகள் பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. Bac பரீட்சையில் வெற்றியீட்டுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளது எனத் தெரிவித்துள்ள Lycée Wolfgang Amadeus Mozart நிர்வாகம், 2015ம் ஆண்டு Bac பரீட்சையில் சித்தியடைந்தோரின் தொகை 88 சதவீதமாகும். இது எதிர்பார்க்கப்பட்டதை விட 10 சதவீத உயர்வாகும் எனவும் தெரிவித்துள்ளது.

பிரான்சின் முதலாவது Lycée என்ற தகமையும் Bac தேர்வின் சித்தி விகிதத்துக்குமான முக்கிய காரணங்களாக

–ஆசிரியர்களினதும் கல்வி நிர்வாகத்தினரதும் சிரத்தையான வழிநடத்தல்,

– கற்பித முறைகளில் புகுத்தப்பட்டுள்ள புதிய மாற்றங்கள்

– சரியான கல்வித் தேர்வுகளை மாணவர்கள் தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டல்கள்

–கற்பித நேரங்கள் தவிர்த்தும் மாணவர்களுக்கு கூடுதல் உதவியாகக் கொடுக்கப்படும் மேலதிக அறிவுறுத்தல் வகுப்புக்கள்

ஆகியவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

பிரான்சிலுள்ள 4000 லிசேகளில் பெரும்பாலும் Bac பரீட்சையின் வெற்றி விகிதத்தின் அடிப்படையிலேயே தகைமைப்படுத்தப்படுவது வழக்கம். இதில் 160 லிசேக்கள் 100 சதவீத சித்தி வீதம் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை கல்வி அமைச்சரவைத் தரவுகளின் அடிப்படையிலும் நிர்வகிப்பு மற்றும் கற்பித முறைகளின் அடிப்படையிலும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

நான்காயிரம் லிசேக்களில் (அரச மற்றும் தனியார்) தரப்படுத்தலில் Lycée Mozartக்கு ஆறாவது இடமாகும். முதல் ஐந்து இடங்களையும் தனியார் லிசேக்களே ஆக்கிரமித்துள்ளன. முதலாவது இடம் பிரான்சின் கடல் கடந்த மாகாணமான Guadeloupeல் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் விருதுப் பட்டியலில் 93 பகுதியைச் சேர்ந்த நான்கு லிசேக்கள் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளமையும், Seine Saint Denisக்கு பெருமையே.

# அதிக அழுத்தத்துடன் பிரான்ஸ் முதலாளிகள்




பிரான்சில் இரண்டு பேருக்கு ஒரு முதலாளி மன அழுத்தத்துடன் வேலை செய்யவேண்டி இருப்பதாக Opinionway நிறுவனம் கருத்துக் கணிக்கிறது.

50 இற்கு குறைவான வேலையாட்களுடன் உள்ள நிறுவனங்களில் கடந்த ஆண்டில் 47% முதலாளிகள் மனஅழுத்தத்துடன் வேலை செய்தனர். இந்த ஆண்டு 52 வீதமாக அதிகரித்துள்ளது.

அண்ணளவாக அரைப்பங்கு முதலாளிகள் தங்கள் தூக்கத்தைக் கெடுத்தவர்களாகவே பிரான்சில் உள்ளனர். 2014ம் ஆண்டில் கால்ப்பங்கிற்கும் குறைவான முதலாளிகளே மன அழுத்தத்திற்கு உள்ளாகியவர்களாக இருந்துள்ளனர்.

பாதிப்பிற்குள்ளான முதலாளிமார்களில் நிதி போதாமல் இருப்போர் 61 வீதமாகவும், தங்கள் தொழிலில் நம்பிக்கை இழந்தவர்களாக 60 வீதத்தினரும் மிக அதிக வேலைப்பழுவுடன் 58 வீதமானோர் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் தாங்கள் வேலை செய்கின்ற குழுவில் மூன்றில் ஒருவர் மருத்துவ விடுப்பு எடுக்காமல் தங்கள் நிறுவனத்தின்) குழுவைக் காப்பதற்காக வேலை செய்யவேண்டியும் உள்ளது.



## சிக்காக்கோவை அலங்கரிக்கும் பாரிஸ் ஓவியம்

இந்த ஓவியம் 1884ஆம் ஆண்டு, ஜோர்ச் சோரத் என்ற பிரபல பாரிஸ் ஓவியரால் வரையப்பட்டது. La Grande Jatte என்னும் இடத்தில் செயின் நதிக்கரையில் ஒரு மாலைப் பொழுதை சித்தரிக்கும் வகையில் இந்த சித்திரம் வரையப்பட்டுள்ளது. 3.07மீற்றர் அகலமும் 2.07மீற்றர் நீளமும் உடைய இந்த ஓவியம் ஜோர்ச் சோரத்தினால் வரையப்பட்ட மிகப்பெரிய ஓவியமாக விளங்குகின்றது.

பாரிஸ் ஓவியர்களால் வரையப்பட்ட மிக முக்கிய ஓவியங்களில் ஒன்றாக இது பார்க்கப்படுகின்றது. ஜோர்ச் சோரத் மரணமடைந்துவிட்டதால் 30 வருடங்கள் வரைக்கும் இந்த ஓவியத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. மற்றொரு பிரபல ஓவிய ரசிகரால் இந்த ஓவியம் கண்டறியப்பட்டு 1924ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிக்காகோ நுண்கலைக் கூடத்திற்கு "காலவரையறையின்றி" வழங்கப்பட்டது.

தற்போது அங்கே பாரிசின் புகழ்பெற்ற ஓவியமாக இது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

















# Ken Loach க்கு மீண்டும் தங்கப்பனை விருது





69வது Cannes திரைப்பட விழா விருதுகள் இம்முறையும் எதிர்பார்ப்புகளையும், யூகங்களையும் தகர்த்துள்ளது. பல எதிர்பார்க்கப்பட்ட ஆளுமைகளைத் தவிர்த்து Ken Loach இரண்டாவது முறையாக தங்கப்பனை விருதை வென்றுள்ளார்.

நம் காலத்தின் மகத்தான இடதுசாரிக் கலைஞன் என வர்ணிக்கப்படும் இங்கிலாந்து இயக்குனர் Ken Loach தனது 79வது வயதில் மீண்டும் தங்கப்பனையை சாத்தியப் படுத்தியுள்ளார். கான் விழாவில் இரண்டாவது தங்கப்பனை வென்ற Françis ford coppola, Emir Kusturica, Bille August, Michael Haneke மற்றும் Fréres Dardenne வரிசையில் எட்டாவது இயக்குனராக இணைந்துள்ளார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் Le vent se lève திரைப்படத்திற்காக தங்கப்பனை வென்றிருந்தார். இந்த வருடம் அவுஸ்திரேலிய இயக்குனர் George Miller தலைமையிலான யூரி குழுவினர் Ken Loach ன் Moi, Daniel Blake திரைப்படத்தைத் தெரிவு செய்து கௌரவித்துள்ளனர்.

Moi, Daniel Blake - இங்கிலாந்தைச் சேர்ந்த Daniel Blake ஒரு தச்சுவேலைத் தொழிலாளி. தனது 59வது வயதில் இருதய நோயினால் வேலைக்குச் செல்ல முடியாத நிலை. இந்நிலையில் 59 வருடங்களில் முதல் முறையாக அரச சமூகக் கொடுப்பனவு உதவியை நாடுகின்றார். அரச நிர்வாக அமைப்பு அவரை எப்படிப் பந்தாடுகிறது என விபரிக்கின்றது திரைப்படம்.



நமது தற்காலச் சமூகத்தில் வேலைவாய்ப் பின்மையால் வேறு வழிகளின்றி சமூகக் கொடுப்பனவுகளை நாடும் ஒருவர் படும்பாடு பொருளாதார ரீதியான வீழ்ச்சிகள் என அன்றாடம் நாம் காணும் காட்சிகளை சமூகப் பொறுப்புணர்வுடன் எம்முன் காட்சிப்படுத்தியதற்கான விருதுதான் இது என யூரிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.



சிறந்த நடிகருக்கான விருதை ஈரான் திரைப்படமான Le Client கதாநாயகன் Shahab Hosseini தன்வசப்படுத்தியுள்ளார். சிறந்த நடிகைக்கான விருது பிலிப்பைன்ஸ் திரைப்படமான Ma Rosa நடிகை Jaclyn Jose க்கும் Grand prix விருது கனடா இயக்குனரான 27 வயதேயாகும் Xavier Dolan ன் Juste la fin du monde திரைப்படத்துக்கும் கிடைத்துள்ளது.





லாச்சப்பலில்

# விஷ்ணு கபே



தரம்-சுவை



**இலங்கை இந்திய அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்ந்திட**

**187, rue du Faubourg Saint-Denis, 75010 Paris**

Tél. : 06.99.49.20.85

லாச்சப்பலில்...

# Gooday

## Centre de Beauté

- மணப்பெண் அலங்காரம்
- மருதாணி அலங்காரம்
- நக அலங்காரம்
- கண்புருவம் வடிவமைத்தல்
- பேசியல்,
- தலைக்கான ஒயில் மசாஜ்

போன்ற அனைத்து

அழகுசேர் வேலைகளிற்கும்..

உங்கள் அழகுக்கு

அழகு சேர்க்க

*எம்மை நாடுங்கள்!*





**மணப்பெண் அலங்காரம்**

**உங்கள் இல்லங்களுக்கு வந்தும்**

**செய்துதரப்படும்**

**Tél.: 01 42 05 78 67**

*208 Bis, Rue du Fbg St-Denis, 75010 Paris*

(‘சிங்கப்பூர் சில்க்’ இற்கு அருகாமையில்)



# எல்லை மீறும் வீதிப் போராட்டங்கள்!

Loi du travail அமுல்ப்படுத்தலுக்கு எதிரான தொடர் போராட்டங்களில் தொடரும் அதீத வன்முறைகளால் இதுவரை 1300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 819 பேர் விசாரணைக் கைதிகளாகவும் 51 பேர் தண்டனை பெற்று சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். அதீத வன்முறையாளர்கள் எனக்கருதப்படும் குறிப்பிட்ட சிலருக்கு வீதிப் போராட்டங்களில் பங்குபற்றுவதற்கான தடை உத்தரவுகளையும் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

பாதுகாப்புத் துறையினர் மீதான கண்மூடித்தனமான கசப்புணர்வை நிறுத்தக்கோரி பொலிஸ் தொழிற்சங்கங்களும் கவனஈர்ப்பு போராட்டங்களை République சதுக்கத்திலேயே நடாத்தி வருகின்றனர். அதேவேளையில் சில நூறு மீற்றர்களில் வாகன நெரிசலில் தற்செயலாக மாட்டி தனித்து நின்ற இரண்டு பொலிஸ் துறையினர் தாக்கப்பட்டு அவர்களின் கார் தீக்கிரையாக்கப்பட்டது மேலும் பதட்டத்தை கூட்டியுள்ளது.

இதுவரை பாதுகாப்புத்துறையினர்மீதும் 12 புகார்கள் பதிவாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் குடியரசில் பாதுகாப்புத் துறையினர் மீதான எந்தவொரு அத்துமீறல்களையும் நாம் அனுமதிக்கப் போவதில்லை எனவும், நீதித்துறையினரும் பாதுகாப்புத்துறையினருடன் இணைந்து துரித முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் பிரான்ஸ் உட்துறை அமைச்சர் Bernard Cazeneuve தெரிவித்துள்ளார். மேலும் தற்போதைய நிலையின் தீவிரம் கருதி மேலதிகமான பாதுகாப்புத் துறையினர் சேவைக்குட்படுத்தப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் மக்களின் கருத்து வெளிப்பாட்டில் 10 பேரில் 8 பேர் தாங்கள் பிரான்ஸ் பாதுகாப்புத்துறையினரை ஆதரித்து நிற்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



## THALYS 20

பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மனி ஆகிய மூன்று நாடுகளின் கூட்டணியால் உருவாக்கப்பட்ட Thalys சேவையின் முக்கிய பங்குதாரர் பிரான்ஸ் ஆகும். 1996ம் ஆண்டு யூன் 4ம் திகதி தனது முதற் சேவையை ஆரம்பித்த இந்நிறுவனம் தனது 20 ஆண்டு நிறைவை தனது பயணிகளுடன் இணைந்து கொண்டாடுகிறது.

சிறப்புச்சலுகையாக மே20ம் திகதி பெல்ஜியம், ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு பயணச்சீட்டுகள் 20 யூரோக்களுக்கு விற்றுத்தீர்க்கப்பட்டன.

## பிரான்சின் கல்வித்தரத்தை சீர்படுத்த

மேலதிகமாக 47 000 ஆசிரியர்கள் எதிர் வரும் செப்ரம்பர் மாதத்தில் நியமனம் செய்யப்படவுள்ளனர். அத்துடன் 2017ம் ஆண்டில் மேலும் 13 000 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.


## ஈழத் தமிழர் திரைப்பட சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

22-05-2016 பாரிசில் கூடிய சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதியநிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் : திரு.றொபேட்
உப தலைவர் : திரு.கொங்கேஸ்
செயலாளர் : திரு.குணா
உப செயலாளர் : திரு.அஜந்தன்
பொருளாளர் : திரு.சதாபிரணவன்
நிர்வாக குழு உறுப்பினர்கள் :
திரு.ஜனேசன், திரு.சதீஸ், திரு.அகீபன்




## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – இல. 23



**மேலிருந்து கீழ்**

1. தமிழ் ஆட்சி மொழியாகவுள்ள நாடுகளில் ஒன்று (6)
2. இதை தட்டான் பூச்சி எனவும் அழைப்பர் (3)
3. மக்கள் கூட்டம் (5)
4. தத்திப்பாயும் இப்பூச்சி தலைகீழாகவுள்ளது (6)
5. கலப்பு உலோகங்களில் ஒன்று (5)
6. ஆங்கில எழுத்தாளரான George Orwell ன்மிகப் பிரபலமான புதினம், தமிழிலும் புகழ்பெற்ற நாவலாக வெளிவந்தது (8)
9. அழிவு என்பதை இவ்வாறும் அழைக்கலாம் (5)
12. உடுக்கினை அடித்து குறிசொல்பவர் (4)
13. ராசிகளில் ஒன்று (4)
15. எளிமையான படுக்கை விரிப்பு (2)

**கீழிருந்து மேல்**

18. அரச ஆட்சிக்காலங்களில் வலிமையான நாடுகள் மற்றைய நாடுகள் மீது படையெடுத்து அடக்கி அவர்களிடம் வசூலிப்பது (2)

**இடமிருந்து வலம்**

1. மிகவும் தொன்மையான மனித நாகரீகங்களில் ஒன்று, இமயமலையில் ஆரம்பித்து பாகிஸ்தானை குறுக்கறுத்துப் பாயும் நதியின் கரைகளில் செழித்து வளர்ந்தது. இந்நாகரீகம் ... நாகரீகம் என அழைக்கப்படுகின்றது (5)
4. கோள்களின் காற்று மண்டலத்துக்கு வெளியேயுள்ள பிரபஞ்சத்தின் வெறுமையான பகுதி. விண்கலன்கள் பயணிக்கும் பகுதி (4) (மாறியுள்ளது)
7. பிரபுசாலமன் இயக்கத்தில் வெளியான யானையின் பெயர் கொண்ட திரைப்படம் (3) (குழம்பியுள்ளது)
8. கிணற்றிலிருந்து நீரினை அள்ள இது உதவும். சக்கரம் (3)
10. சீனி அல்லது வெல்லம் (4)
11. பூமி (4)
14. கோடை காலத்தில் மழை பெய்ய இது தணியும் (4) (குழம்பியுள்ளது)
15. ஏதேனும் ஒரு பணிக்காக கூட்டாக திட்டமிட்டு இயங்கும் இடம் (3)
16. இசையின் அடிப்படை வடிவங்களில் ஒன்று (2)
17. ஆண் ஆடு (3)

✔ உங்கள் பதில்களை 10 ஆடி 2016 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.22ல் பரிசு பெறுபவர்கள்.

1. பிரசாந்தன் விஜிதா (Le Bourget)
2. *Faizaan* (La Courneuve)
3. கோணமலை தயாபரன் (Rosny-sous-Bois)

**சரியான விடை எழுதியவர்கள் :**

- கனகசபை கனகராயன் (Stains)
- நாகமணி ஜோதிநாயகம் (Emerainville)
- சயானா (La Courneuve)

**போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !**


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

எங்கள் 16 வருட கால அனுபவம் உங்களுக்கான நிறைந்த சேவையை வழங்குகிறது!

# Autre Vue

## OPTICIEN

*Donnez un sens à votre Regard*

**Jusqu'à 40% Sur les Montures optiques***

**25% Sur les Solaires***

*voir conditions au magasin



## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.

**உங்களது தேவை ! எங்களது சேவை !**



**Mutuelle, CMU**

ஊடாக தரமான

கண்ணாடிகளை

பெற்றுக்கொள்ளலாம்

எமது புதிய கிளை:

**Autre Vue**

58, Av. Flandre - 75019 Paris

Tél / Fax : 09 66 91 54 04 / 01 42 80 54 04

**M° : Riquet (Ligne 7)**

**Autre Vue**


23 rue lamartine - 75009 Paris

Tél / Fax: 01 53 20 04 10

09 67 33 12 83

email: autrevueparis09@gmail.com







## பாரிஸிற்கு கிடைத்த இன்னொரு புதையல்

தனிநபர் ஒருவரின் உலகின் மிகப் பெரிய ஓவிய சேகரிப்பு பாரிஸில் ஒரு புதிய அருங்காட்சியகமாக உருவெடுக்கின்றது. லூவர் அருங்காட்சியகத்திற்கு மிகவும் அருகாமையிலேயே இது அமைக்கப்படவுள்ளதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏல மையமான Christie'sஇன் சொந்தக்காரரான உலகின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவரான பில்லியனர் Francois Pinault என்பவரே இந்த ஓவியங்களின் தற்போதைய சொந்தக்காரன். தனது 1.2 பில்லியன் யூரோக்கள் பெறுமதியான நவீன ஓவியர்களின் தொகுப்பின் அருங்காட்சியகத்தை பாரிஸின் மையப்பகுதியில் அமைந்துள்ள Bourse de Commerce இல் அமைக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். 'இது பாரிசுக்குக் கிடைத்துள்ள மகத்தான வரப்பிரசாதம்' என இந்த உடன்படிக்கையை கையாண்டுள்ள நகர மேஜர் தெரிவித்துள்ளார்.

79 வயதாகும் Francois Pinault உலகின் மிகப்பெரும் புதையல்களாகக் கருதப்படும் அன்றைய ஓவியர் Mark Rothko தொடக்கம் இன்றைய Damien Hirst வரையானவர்களின் ஓவியங்களை சேகரித்துள்ளார். இவற்றைக் காட்சிப்படுத்த பாரிஸில் ஒரு பொருத்தமான இடத்தைப் பெற்றுக்கொள்ள நீண்ட காலம் தேடியும் கிடைக்காததால் இதுவரை அவை வெனிஸில் அமைந்துள்ள அவரது அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.





சென்.ஹென்றிஸ் ப.மா.சங்கத்தின்
25வது ஆண்டுவிழா
12.06.2016

பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தின் வெள்ளிவிழா
கலைவண்ணம்
9. 10. 2016

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியத்தின்
சார்ட் மாதா திருத்தல யாத்திரை
29. 05. 2016

TRT தமிழ் ஒலி
TRT உறவுகளின் சங்கமம்
28. 05. 2016



# பிரான்ஸின் புதிய பெரிய நகரம் Nancy

பிரான்ஸின் புதிய பெரிய நகரங்களில் ஒன்றாக Nancy வரையறுக்கப்பட்டுள்ளது. இதுவரை யாரும் அதன் வரலாற்று மகிமையை அறிந்ததில்லை. மண்ணில் புதையுண்டிருந்த மாணிக்கம் போல் இன்று இதன் சிறப்பு வெளிவந்துள்ளதாக பிரான்ஸ்மக்கள் பிரமிக்கிறார்கள்.

பிரான்சின் புதிய மாநகரம் என்ற தகைமையை வென்றுள்ள Nancy, ஏற்கனவே உள்ள Grand Paris, Bordeaux, Lyon, Nice மற்றும் Marseille ஆகியவற்றின் வரிசையில் இடம்பிடித்துள்ளது.

இந்தத் தகமையைப் பெற்றுக்கொள்ள தேவையான 400,000 சனத்தொகை அங்கு இல்லாத போதும் பெரிதும் போராடி இந்த இடத்தைப் பிடித்துள்ளது. இதன் மூலம் புதிய அதிகாரங்களையும், நிதிச் செல்வாக்கையும் பெற்றுக்கொள்ளும் அதன் அயல் மாநகரமான Strasbourg இற்கு போட்டியாக உருவெடுத்துள்ளது.

வரலாற்றம்சங்களும், கலையம்சங்களும் நிறைந்த பூமியாக Nancy விளங்குகின்றது. பெரும் அரணாக விளங்கிய நகரின் எச்சங்களும் Saint-Epvre Cathedral தேவாலயமும் எல்லோரையும் வியக்க வைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

### 'கார்கள் இல்லா நாள்'

## Champs-Élysées வீதியில் வாகனங்களுக்குத் தடை!

பாரிஸின் மிகப் புகழ்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான Champs-Élysées வீதியில் மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமை வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாதசாரிகளுக்கான நாள் என முக்கியத்துவம் பெறும் இந் நடைமுறை மே 8 ஆம் திகதி முதன்முதலான நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் போது பாரிஸில் உள்ள அருங்காட்சியங்களும் இலவசமாக மக்கள் பார்வையிடும் வகையில் திறந்திருந்தன.

மேலும் ஒன்பது புதிய வீதிகளும் கூட ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் பொது விடுமுறை நாட்களிலும் பாதசாரிகளுக்கு மட்டும் என வரையறுக்கப்படவுள்ளன. ஏற்கனவே 13 வீதிகள் சூழல் மாசடைவதைத் தடுக்கும் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் பாரிசில் முதலாவது "கார்கள் இல்லா நாள்" நடைமுறைப்படுத்தப்பட்டதும் அது வெற்றியளித்ததுமே இந்த முடிவை எடுக்க பலமாக இருந்துள்ளது.

l'Assurance Maladie
Caisse Nationale

## 'Arrêt de travail'
## மருத்துவர்கள் மீதான அழுத்தம்!

பிரான்சில் தொடரும் தேசிய சுகாதார நிதியத்தின் கடன்சுமையைக் கருத்தில் கொண்டு புதிய பல நடைமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மருத்துவ தொழிற்சங்கப் பிரதி நிதிகளும் சுகாதாரத்துறையினரும் இந்நடைமுறைகள் தொடர முதற்கட்ட பேச்சுவார்த்தைகளில் இறங்கியுள்ளனர்.

இவற்றில் முக்கிய புள்ளியாக பலராலும் கருதப்படுவது பணிநிறுத்தம் (arrêt de travail) தொடர்பானதாகும். குறைவான பணிநிறுத்த நாட்களை வழங்கும் மருத்துவர்களுக்கு போனஸ் வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரான்சில் நோய்கள் அல்லது இயலாமை என மருத்துவரிடம் செல்பவர்களுக்கு அவர்களின் நோயின் தீவிரம் கருதியும் இயலாமையைக் கருத்தில் கொண்டும் ஓய்வு தேவைப்படின் அவர்களுக்கு பணிநிறுத்தம் (arrêt de travail) வழங்கப்படுகின்றது. இப்பணி நிறுத்தக் காலத்துக்கான ஊதியம் தேசிய சுகாதாரக்காப்பீட்டு நிதியத்தினாலேயே (CNAM) வழங்கப்படுகின்றது.

சாதாரணமாக காய்ச்சல் (grippe) என்றால் 3 நாட்களும், அடிநா அழற்சி (Angine) என்றால் 5 நாட்களும், சுளுக்கு (entorse) எனின் அவரின் பணியின் தீவிரத்திற்கு ஏற்ப 21 நாட்கள் வரை பணிநிறுத்தம் செய்ய முடியும். இவ்வாறு தேசிய சுகாதார நிதியத்தினால் வரையறுக்கப்பட்ட பணிநிறுத்த நாட்கள் நடைமுறையில் உள்ளன.




இவற்றைக் கணக்கிலெடுக்காது சில மருத்துவர்கள் அதிக அளவிலான பணி நிறுத்தங்களை வாரி வழங்குவதாகவும் அவை சுகாதார மையத்தின் மீது சுமையாக இறங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு மருத்துவருக்கு (Generaliste) மக்கள் சேவை என்ற அடிப்படையில் 4500 யூரோக்கள் வரை (Rosp - La rémunération sur objectifs de Santé publique) சுகாதார நிதியத்தால் வழங்கப்படுகின்றது. 2015ம் ஆண்டு மட்டும் 90000 மருத்துவர்கள் இக் கொடுப்பனவைப் பெற்றுள்ளனர். பணிநிறுத்தங்களிலும் கவனம் செலுத்தினால் மேலும் போனஸ் 7000 யூரோ வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மருத்துவர்களை குழந்தைகள் போன்று நடத்துவதை அரசு கைவிட வேண்டும் என FME பிரான்ஸ் மருத்துவர்கள் கூட்டமைப்புத் தலைவர் Jean Paul Hamon தனது எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் பலன் கொடுத்தால் கோடைகால இறுதியில் சுகாதார காப்பீட்டு மையமும் மருத்துவர்சார் தொழிற்சங்கங்களும் புதிய உடன்படிக்கையில் கையொப்பமிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.






# வேலைத்தேர்வில் இனப்பாகுபாடு?

வேலைக்கு ஆட்சேர்க்கும் போது இனப் பாகுபாடு காட்டுவதாக நீண்ட காலமாக இருந்துவரும் பிரச்சினையை முறியடிக்க பிரான்சின் தொழில் அமைச்சு பாரிய பிரச்சாரம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. வீதிப் பதாகைகள், கடைகள், மெத்ரோ நடைபாதைகள் என அனைத்து இடங்களிலும் தற்போது இந்த பிரச்சாரப் பதாகைகளைப் பார்க்கலாம். இருந்தாலும் இது நாட்டில் பெரும் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. வேலைக்கு ஆட்சேர்ப்பவர்களையும், வேலையாட்களையும் இனப் பாகு–பாடு பற்றி சிந்திக்க வைக்கும் நோக்கில் பாரிய அளவில் (செலவீனத்தை குறிப்பிடவில்லை) 2000 இற்கும் மேற்பட்ட இந்த சர்ச்சைக்குரிய பதாகைகள் ஒட்டப்பட்டுள்ளன.

பார்த்த உடனேயே விளங்கும் வகையில் பாதி பாதி வேறு இனத்தவர் முகங்கள் கொண்டு இவை வடிவமைக்கப் பட்டுள்ளன. ஒரு பாதியில் வெள்ளையினத்தவரின் முகம் சாதகமான பதிலுடனும், மறு பாதி வேறு நிறத் தோலுடையவர் எதிர்மறையான பதிலுடனும், நிறுவனங்களில் இடம்பெறும் இந்த இனப் பாகுபாட்டை பிரதிபலிக்கின்றன.

இவை மட்டுமல்லாது சமூக வலைத்தளங்களிலும் காணொளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. நியாயமற்ற வகையில் காரணம் ஒன்றைத் தேடி அவர்களை நிராகரிக்கும் பாணியில் அந்தக் காணொளிகள் அமைந்துள்ளன.

#Les Competences D'abord (திறமையே எப்போதும் முதன்மையானது) என்ற தொனிப்பொருளில் இந்த பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது திறமை ஒன்றே ஆட்சேர்ப்பு முடிவைத் தீர்மானிக்க வேண்டும் என்பதை அனைவருக்கும் நினைவுபடுத்துகின்றது.

மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட இனங்களுக்கிடையில் இந்தப் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சமூகத்தில் உள்ள ஏனைய இனங்களையும் ஏனைய பாகுபாட்டு விடயங்களையும் இவை பிரதிபலிக்க தவறிவிட்டன எனவும் சர்ச்சைகள் எழுந்துள்ளன.
வயது, உடற் பருமன், கர்ப்பம் தரித்திருத்தல் மட்டுமன்றி அழகும் பாகுபாட்டு விடயங்களில் அடங்குவதாகவும் இவற்றை ஏன் பிரதிபலிக்கவில்லையெனவும் கூட பிரான்ஸ் வாழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்பதைவிட...**
**முக்கியமானது**
**எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறோம் என்பது...**

இலங்கை தமிழ் பழையமாணவர் ஒன்றியம்
www.uaets-france.fr
கணக்கு விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.

நிலா
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld. de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை -பாரிஸ் 17

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

யாழ் இறைச்சிக்கடை
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

ராக ஜோதி மளிகை
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

மாயவர் - மொழிபெயர்ப்பு
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

தமிழாலயம்
19, Rue Cail, 75010 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

Karan Coiffure
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

ஞானமணி பல்பொருள் அங்காடி
218, Rue. Anatole Francy - 93 Drancy

அம்பாள் ஸ்ரோஸ்
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்
Le Blanc Mesnil (93), Clichy (92)

அஷ்டலக்சுமி கோயில்
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)

தீவக செய்திகளை அறிய..
www. Allaiyoor.com


UEFA EURO 2016 FRANCE

# 15வது ஐரோப்பிய கிண்ணம்

பதினைந்தாவது ஐரோப்பியக் கிண்ணத்துக்கான காற்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் யூன் 10ம் திகதி பிரான்சில் கோலாகலமாக ஆரம்பமாகின்றன. பிரான்சில் தற்போது நிலவும் அவசரகால நிலையும், தீவிரவாதத் தாக்குதல்களுக்கு மீண்டும் முகம் கொடுக்க நேரலாம் என்ற அச்சமும் ஐரோப்பியக் கிண்ண உற்சாகத்தை குறைக்கத்தான் செய்கின்றன. இருப்பினும் தீவிர காற்பந்து ரசிகர்கள் அச்சத்தை மீறி வழமையான ஆவலுடன் தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர்.

- இதுவரை 16 நாட்டு அணிகள் மட்டுமே பங்குபற்றிவந்த இப்போட்டிகளில் முதல் முறையாக இம்முறை 24 அணிகள் களமிறங்குகின்றன.
- பிரான்சின் 9 பெருநகரங்களில் 10 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன. பாரிசில் மட்டும் இரண்டு மைதானங்களில் நடைபெறுகின்றன.
- 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டிகள் நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றன.
- இப்போட்டிகளில் கங்கேரியா 48 வருடங்களின் பின்னரும் பெல்ஜியம் 16 வருடங்களுக்குப் பின்னரும் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன.
- ஐஸ்லாந்து, அல்பானியா, சொலாவாக்கி, வேல்ஸ் (Pays de Galles) மற்றும் வட அயர்லாந்து அணிகளுக்கு இது ஐரோப்பியக் கிண்ணத்துக்கான முதற் போட்டியாகும்.
- முன்னாள் சாம்பியன்களான நெதர்லாந்து (Pays Bas) கிறீஸ் மற்றும் டென்மார்க் இம்முறை போட்டிகளுக்குத் தெரிவாகவில்லை.
- இதுவரை ஜேர்மனி 11 போட்டிகளில் பங்குபற்றி 6 முறை இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி 3 முறை வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்துக்கொண்டது.
- நடப்புச் சாம்பியனான ஸ்பெயின் 9 போட்டிகளில் விளையாடி 3 முறை வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டார்கள்.
- நெதர்லாந்து 9 தடவைகளும், பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் என்பன 8 தடவைகளும் போட்டிகளிற்குத் தெரிவாகின. இதில் பிரான்ஸ் 2 தடவைகளும் ஏனையவை ஒரு தடவையும் கிண்ணத்தை வென்றுள்ளன.

1984 மற்றும் 2000 ஆண்டுகளில் கிண்ணத்தை வென்ற பிரான்ஸ் இம்முறையும் வெல்லும் என அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றது. போட்டிகள் பிரான்சில் நடைபெறுவதும் பிரான்சிற்கு மேலும் அனுகூலமாக அமைகிறது. 2000 ம் ஆண்டு கிண்ணத்தை வென்று கொடுத்த Didier Deschamps தெரிவு செய்துள்ள இளம் வீரர்கள் மீதான நம்பிக்கை பிரான்சை விட மற்றைய நாடுகளில் பலமாகவே உள்ளது.

இன்றைய திகதிக்கு உலகின் சிறந்த முன்னணி வீரர்களுள் ஒருவரான Karim Benzema, 'Sextape' விவகாரத்தால் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அதே போல Mamadou Sakhoம் ஊக்கமருந்து பாவனையால் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இன்னுமொரு முக்கிய வீரரான Raphaël Varane காயத்தால் அவதிப்பட்டுவருகிறார். இவற்றையும் மீறி அண்மைக்காலமாக தமது திறமையை நிரூபித்துவரும் பிரான்சின் இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் பிரான்ஸ் ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.




## GROUPE A
FRA ROU ALB SUI

| Date | Heure - Ville | Match |
|---|---|---|
| 10.06 | 21H00 - SAINT DENIS | FRA : ROU |
| 11.06 | 15H00 - LENS | ALB : SUI |
| 15.06 | 18H00 - PARIS | ROU : SUI |
| 15.06 | 21H00 - MARSEILLE | FRA : ALB |
| 19.06 | 21H00 - LYON | ROU : ALB |
| 19.06 | 21H00 - LILLE | SUI : FRA |

## GROUPE B
ANG RUS GAL SVQ

| Date | Heure - Ville | Match |
|---|---|---|
| 11.06 | 18H00 - BORDEAUX | GAL : SVQ |
| 11.06 | 21H00 - MARSEILLE | ANG : RUS |
| 15.06 | 15H00 - LILLE | RUS : SVQ |
| 16.06 | 15H00 - LENS | ANG : GAL |
| 20.06 | 21H00 - TOULOUSE | RUS : GAL |
| 20.06 | 21H00 - SAINT-ÉTIENNE | SVQ : ANG |

## GROUPE C
ALL UKR POL ILN

| Date | Heure - Ville | Match |
|---|---|---|
| 12.06 | 18H00 - NICE | POL : ILN |
| 12.06 | 21H00 - LILLE | ALL : UKR |
| 16.06 | 18H00 - LYON | UKR : ILN |
| 16.06 | 21H00 - SAINT-DENIS | ALL : POL |
| 21.06 | 18H00 - MARSEILLE | UKR : POL |
| 21.06 | 18H00 - PARIS | ILN : ALL |

## GROUPE D
ESP RTC TUR CRO

| Date | Heure - Ville | Match |
|---|---|---|
| 12.06 | 15H00 - PARIS | TUR : CRO |
| 13.06 | 15H00 - TOULOUSE | ESP : RTC |
| 17.06 | 18H00 - SAINT-ÉTIENNE | RTC : CRO |
| 17.06 | 21H00 - NICE | ESP : TUR |
| 21.06 | 21H00 - LENS | RTC : TUR |
| 21.06 | 21H00 - BORDEAUX | CRO : ESP |

## GROUPE E
BEL ITA IRL SUE

| Date | Heure - Ville | Match |
|---|---|---|
| 13.06 | 18H00 - SAINT DENIS | IRL : SUE |
| 13.06 | 21H00 - LYON | BEL : ITA |
| 17.06 | 15H00 - TOULOUSE | ITA : SUE |
| 18.06 | 15H00 - BORDEAUX | BEL : IRL |
| 22.06 | 21H00 - LILLE | ITA : IRL |
| 22.06 | 21H00 - NICE | SUE : BEL |

## GROUPE F
POR ISL AUT HON

| Date | Heure - Ville | Match |
|---|---|---|
| 14.06 | 18H00 - BORDEAUX | AUT : HON |
| 14.06 | 21H00 - SAINT-ÉTIENNE | POR : ISL |
| 18.06 | 18H00 - MARSEILLE | ISL : HON |
| 18.06 | 21H00 - PARIS | POR : AUT |
| 22.06 | 18H00 - SAINT-DENIS | ISL : AUT |
| 22.06 | 18H00 - LYON | HON : POR |

இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு